# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 118/பேரூ/2024**
**நாள் : 27.12.2024**

திரு. R. தட்சிணாமூர்த்தி
தங்கம் நகர், ஈரோடு மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சி, ஈரோடு மாவட்டம். – எதிர் மனுதாரர்

ஈரோடு மாவட்டம், ராசாம்பாளையம் அஞ்சல், தங்கம் நகர், குப்பம்பாளையம், கதவு எண். 183 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. தட்சிணாமூர்த்தி என்பவரின் 22.08.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.08.2024 அன்று பெறப்பட்டு, 118/பேரூ/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

ஈரோடு மாவட்டம், ராசாம்பாளையம் அஞ்சல், தங்கம் நகர், குப்பம்பாளையம், கதவு எண். 183 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. தட்சிணாமூர்த்தி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

"எனது மகன் T. HAREESH மற்றும் T. SHARUMATHI ஆகியோரின் BIRTH CERTIFICATE (TRANSLATED VERSION) சான்றிதழ் தலா நான்கு அசல் பிரதிகள் கோரி கொடுமுடி தேர்வு நிலை பேரூராட்சியில் பணிபுரியும் பதிவறை எழுத்தரை அணுகியதற்கு, அவர் ஒவ்வொரு பிரதிக்கும் தலா ரூ.200/- (இருநூறு ரூபாய்) மற்றும் தேடுதல் கட்டணம் ரூ.200/- ஆக மொத்தம் ரூ.200/- x 8 பிரதி = ரூ.1600/- + தேடுதல் கட்டணம் ரூ.200/- ஆக மொத்தம் ரூ.1800/- (ஆயிரத்து எந்நூறு ரூபாய்) என என்னிடமிருந்து ரூ.1800/- ரொக்கமாக பெற்றுக் கொண்டார். அலுவலகத்தில் அவரது இருக்கைக்கும் அருகே பிறப்புச் சான்றிதழ் பெற ஒரு பிரதிக்கு ரூ.200/- என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக எழுதப்பட்ட அறிவிப்பு கடிதம் ஒட்டப்பட்டு இருந்தது. அதன் அடிப்படையிலேயே பதிவறை எழுத்தர் திரு. விஜயராகவன் என்பவர் தொகை பெறுவதாக எண்ணி மேற்படி தொகையை கொடுத்தேன். பதிவறை எழுத்தர், எனது மகன் மற்றும் மகளின் தலா நான்கு பிரதிகள் அசல் பிறப்புச் சான்றிதழை மட்டும் என்னிடம் கொடுத்தார். என்னிடம் பெற்ற தொகைக்கான இரசீது எதுவும் இன்று வரை வழங்கவில்லை. அதன்பிறகு பலமுறை பதிவறை எழுத்தரை தொடர்பு கொண்டு மேற்படி தொகைக்கான இரசீது வழங்கும்படி கேட்டதற்கு இரசீது எதுவும் தேவையில்லை என்று கூறிவிட்டார். எனவே இவ்விஷயத்தில் தன்னிடம் பதிவறை எழுத்தர் திரு. விஜயராகவன் பெற்ற தொகை ரூ.1800/- முறையாக அரசாங்கத்தில் உரிய இடத்தில் செலுத்தாமல் தனதாக்கிக் கொண்டுள்ளதாக தெரிகிறது.

எனவே அரசுக்கு சேர வேண்டிய தொகை ரூ.1800/- கையாடல் செய்து தனதாக்கிக்கொண்ட பதிவறை எழுத்தர் திரு. விஜயராகவன் என்பவர் மீது உரிய துறை ரீதியான கடுமையான நடவடிக்கை எடுத்து எனது தொகைக்குரிய இரசீது எனக்கு கிடைக்க ஆவன செய்து உத்திரவிட வேண்டுகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 30.08.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை கோரப்பட்டது.

3) கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 06.12.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார் :-

"ஈரோடு மாவட்டம், கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சியில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் மனு எண்.5979596, நாள் 09.08.2023ல் புகார் மற்றும் நிவாரணம் கோரி பிறப்பு சான்றிதழ் தொடர்பாக திரு. R. தட்சிணாமூர்த்தி, த/பெ. ராமசாமி, 183, குப்பம்பாளையம் என்பவர் புகார் அளித்துள்ளார். மேற்படி புகாரில் மனுதாரர் தன்னுடைய இரண்டு குழந்தைகளுக்கு 29.12.2008 மற்றும் 06.06.2024 ஆகிய தேதிகளில் பிறப்பு சான்றிதழ்கள் கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்திலிருந்து பெற்றுள்ளார். மேற்படி பெற்ற சான்றிதழ்களில் குழந்தையின் பெயருக்கு இன்சியல் வைத்து சான்றிதழ் கோரி 30.06.2023ல் ஒவ்வொரு குழந்தைக்கும் தலா 4 சான்றிதழ்கள் கோரி மொத்தம் 8 சான்றிதழ்கள் வழங்குமாறு விண்ணப்பம் அளித்துள்ளார்.

மேற்படி சான்றிதழ்களுக்கு இப்பேரூராட்சி அலுவலக பதிவறை எழுத்தர் தலா ரூ.200/- வீதம் 8 சான்றிதழ்களுக்கு ரூ.1600/- மற்றும் தேடுதல் கட்டணமாக ரூ.200/- என மொத்தம் ரூ.1800/-ஐ பெற்று, அப்போதைய செயல் அலுவலர்கள் அவர்களின் ஆலோசனைப்படி பதிவறை எழுத்தர் மூலம் படைவீரர் கொடி நாள் விற்பனைக்கு வரப்பெற்ற புத்தக எண்.1, இரசீது எண்.0976983 முதல் 0977000 வரை 18 இரசீதுகள் போடப்பட்டு வங்கி வரைவோலையாக ஈரோடு மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

மேற்படி கொடி நாள் இரசீதை நேரில் பெற்றுக்கொள்ளுமாறு கைபேசியில் பலமுறை பேசியும் மனுதாரர் அலுவலகத்திற்கு வரவில்லை. மேலும் இதற்குரிய பதிலினையும் மனுதாரருக்கு உரிய நேரத்தில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் வலைதளத்தின் மூலம் அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரம் சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 23.12.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 18.12.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. R. தட்சிணாமூர்த்தி என்பவர் 23.12.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார் :-

" எனது மகன் T. ஹரிஷ் மற்றும் மகள் T. சாருமதி ஆகிய இருவருக்கும் தலா 4 பிறப்புச் சான்றுகளின் பிரதிகள் (மொத்தம் 8 ) கோரி 03.07.2023 அன்று கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சியில் விண்ணப்பித்தேன். பேரூராட்சியின் பதிவறை எழுத்தர் திரு. விஜயராகவன் என்பவர் ஒரு பிரதிக்கு ரூ.200 என 8 பிரதிகளுக்கு ரூ.1600 மற்றும் தேடுதல் கட்டணம் ரூ.200 என ஆக மொத்தம் ரூ.1800 செலுத்தப்படவேண்டும் என தெரிவித்தார். அதன்படி, நான் ரூ.1800 பேரூராட்சியில் செலுத்தினேன்.

பேரூராட்சியில் எனது மகன் மற்றும் மகளுக்கு 2008 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் பிறப்பு சான்றிதழ் பெறுவதற்கு ஒரு நபருக்கு ஒருமுறை கட்டணமாக ரூ.200/– மட்டுமே செலுத்தி ஐந்து பிரதிகள் பெற்றுள்ளேன். ஆனால் 3.07.2023 அன்று அதே பிறப்பு சான்றுகள் பெற விண்ணப்பித்த போது, பேரூராட்சியில் ஒவ்வொரு பிரதிக்கும் ரூ.200/– கட்டணம் செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

3.07.2023 அன்று நான் பேரூராட்சியில் செலுத்திய 8 பிரதிகளுக்கான ரூ. 1600/– மற்றும் தேடுதல் கட்டணம் ரூ.200/– ஆகியவற்றுக்கு இந்நாள் வரை எவ்வித ரசீதும் வழங்கப்படவில்லை.

எதிர்காலத்தில் இதுபோன்று முறைகேடுகள் நடைபெறக்கூடாது என கொடுமுடி பேரூராட்சிக்கு உரிய அறிவுரைகள் வழங்குமாறு இம்முறை மன்றத்தில் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரரான கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் (பொ) திருமதி சி. சாந்தி என்பவர் தனது கடித நாள் 20.12.2024ன் வழி தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால், கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. சே. மணிவண்ணன் என்பவர் தனது சார்பாக கலந்து கொள்வதற்கு அனுமதி கோரியுள்ளார். அதன்படி 23.12.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. சே. மணிவண்ணன் என்பவர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்:-

"மனுதாரர் திரு. R. தட்சிணாமூர்த்தி, என்பவர், தனது மகன் T. ஹரிஷ் மற்றும் மகள் T. சாருமதி ஆகிய இருவருக்கும் தலா 4 பிறப்புச் சான்றுகளின் பிரதிகள் கோரி 3.07.2023 அன்று விண்ணபித்ததின் பேரில் அரசு நிர்ணயம் செய்துள்ளபடி ஒரு பிரதிக்கு 200 வீதம் மொத்தம் 8 பிரதிகளுக்கு ரூ.1600/– மற்றும் தேடுதல் கட்டணம் ரூ.200/– என ஆக மொத்தம் ரூ.1800/– மனுதாரரிடம் பெறப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட ரூ.1800/–ஐ அப்போதைய பேரூராட்சியின் செயல் அலுவலர் அவர்களின் ஆலோசனையின்படி *Armed Forces Flag Day Fund Erode District*, என்ற பெயரில் வரைவோலை எடுக்கப்பட்டு ஈரோடு மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு இப்பேரூராட்சி அலுவலக கடித ந.க. எண். 56/2023/இ, நாள் 11.08.2023 நாளிட்ட கடிதம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டது.

மனுதாரரிடம் மேற்படி கொடி நாள் இரசீதை பெற்றுக்கொள்ளுமாறு தொலைபேசியில் தெரிவித்தும் மனுதாரர் அலுவலகத்திற்கு வரவில்லை.

மேற்காணும் தகவலை உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்கிற இணையதள வழியாக மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் செலுத்திய தொகையில் எவ்வித முறைகேடு செய்யாமல் அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" - என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மற்றும் கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் திரு. சே. மணிவண்ணன் என்பவரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

ஈரோடு மாவட்டம், தங்கம் நகர் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. R. தட்சிணாமூர்த்தி என்பவர் தனது 22.08.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் தனது மகன் T. ஹரிஷ் மற்றும் மகள் T. சாருமதி ஆகிய இருவருக்கும் தலா 4 பிறப்புச் சான்றுகளின் பிரதிகள் (மொத்தம் 8 ) கோரி 03.07.2023 அன்று கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சியில் விண்ணப்பித்தற்கு, ஒரு பிரதிக்கு ரூ.200 என 8 பிரதிகளுக்கு ரூ.1600 மற்றும் தேடுதல் கட்டணம் ரூ.200 என ஆக மொத்தம் ரூ.1800 பதிவறை எழுத்தர் திரு. விஜயராகவன் என்பவரிடம் வழங்கப்பட்டதாகவும், இதற்கான ரசீது பேரூராட்சி அலுவலகத்திலிருந்து தனக்கு வழங்கப்படவில்லை என தெரிவித்து, மேற்படி கட்டணத் தொகை பேரூராட்சியில் கையாடல் செய்துள்ளதாக புகார் தெரிவித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிறப்பு இறப்பு பதிவு விதிகளில் விதி 13 (1) (d) ன்படி பிறப்பு அல்லது இறப்பு சான்று வழங்க ஒவ்வொரு பிரதிக்கும் தலா ரூ.200/– கட்டணம் எனவும், மற்றும் விதி 13 (1) (a) ன்படி தேடுதல் கட்டணமாக ஒரு சான்றுக்கு ரூ.100/– என அரசு நிர்ணயம் செய்துள்ளது.

மனுதாரர் கோரியபடி , பிறப்புச் சான்றுகள் வழங்க மேற்காணும் தமிழ்நாடு பிறப்பு இறப்பு பதிவு விதிகளின்படி, மனுதாரரின் மகன் மற்றும் மகளுக்கு தலா 4 சான்றுகள் வீதம் 8 பிரதிகளுக்கு ஒரு பிரதிக்கு ரூ. 200/– வீதம் 8 பிரதிகளுக்கு ரூ. 1600/– மற்றும் தேடுதல் கட்டணமாக ஒரு சான்றுக்கு ரூ.100/– வீதம் 2 சான்றுகளுக்கு ரூ.200/– என மொத்தம் ரூ.1800/– செலுத்த மனுதாரருக்கு அறிவுறுத்தப்பட்டு, மனுதாரரும் அவ்வாறே தொகை ரூ.1800/–ஐ பேரூராட்சியில் செலுத்தியுள்ளார்.

ஆனால் மனுதாரர் செலுத்திய ரூ. 1800/– தொகைக்கு உடனடியாக இரசீதினை பேரூராட்சியால் வழங்காமல் இத்தொகையினை "முன்னாள் படைவீரர்களுக்கான இராணுவ கொடி நாள் 2022–ன் கீழ் கொடி நாள் வசூல் கணக்கில் சேர்க்கப்பட்டு, வங்கி வரைவோலை மூலம் செலுத்தப்பட்டு, ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளதை கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண். 56/2023/இ, 11.08.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் தெரியவருகிறது. மேலும் மனுதாரர் செலுத்திய ரூ.1800/–க்கு அவரது பெயரிலேயே (திரு. R. தட்சிணாமூர்த்தி) கொடி நாள் வசூல் கட்டணமாக இரசீதுகள் போடப்பட்டு, மேற்காணும் இரசீதுகளை பெற்றுக் கொள்ளுமாறு பேரூராட்சியால் தொலைபேசி மூலம் தெரிவித்தும் மனுதாரர் இரசீதை பெற்றுக்கொள்ளவில்லை என்பதை, பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலை உதவியாளரின் வாக்குமூலத்தின் மூலம் தெரியவருகிறது.

மேற்காணும் நிலையில் பிறப்பு சான்று வழங்க மனுதாரர் செலுத்திய கட்டணத் தொகை ரூ.1800/– கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சியால் எவ்வித முறைகேடின்றி கொடி நாள் வசூலாக வசூலிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மனுதாரரிடமிருந்து பிறப்பு சான்றுகள் வழங்க வசூலித்த கட்டணத் தொகையை அந்தந்த கணக்கில் செலுத்தப்படாமல், கொடிநாள் வசூல் தொகையில் சேர்த்த கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் நடவடிக்கையினை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

இனி வருங்காலங்களில் நன்கொடையாளரின் ஒப்புதலுடன் கொடி நாள் வசூல் செய்யப்பட்டு உரிய இரசீது வழங்கப்பட வேண்டும் என்றும், பிறப்பு, இறப்பு சான்றுகள் வழங்குவதில் எவ்வித புகாருக்கும் இடம் அளிக்காத வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி, இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 27 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R. தட்சிணாமூர்த்தி ,
   கதவு எண். 183,
   தங்கம் நகர், குப்பம்பாளையம்,
   ராசாம்பாளையம் அஞ்சல், ஈரோடு மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
   கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28

4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
   (பெயரிடப்பட்ட உரையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உ திரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)